

கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆலோசனையின் பேரில், கழக இளைஞர் அணிச் செயலாளர் – எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டமன்றத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தலில், கழக வேட்பாளர்களை ஆதரித்து நடைபெறும் பிரச்சாரப் பணிகளில் ஈடுபட உள்ள இளைஞர் அணி நிர்வாகிகளையும், இளம் பேச்சாளர்களையும் ஒருங்கிணைக்க உள்ள மாநிலத் துணைச் செயலாளர்களை சந்தித்து ஆலோசனை மேற்கொண்டார்.



சட்டப்பேரவையில் அவை மரபுகளை மீறி உண்மைக்கு மாறான அவதூறுக் கருத்துகளை தெரிவித்த சட்டத்துறை அமைச்சர் நிர்மல் குமாருக்கு எதிராக தி.மு.க. சார்பில் சட்டப் பேரவைத் தலைவர் ஜே.சி.டி. பிரபாகரிடம், முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. தலைமையில் உரிமை மீறல் நோட்டீஸ் அளிக்கப்பட்டது. மேலும் அமைச்சரின் பேச்சை அவைக்குறிப்பில் இருந்து நீக்கவும் வலியுறுத்தப்பட்டது. நிகழ்வில் சட்டப்பேரவை தி.மு.க. கொறடா எ.வ.வேலு, சட்டமன்ற உறுப்பினர்கள் வசந்தம் கார்த்திகேயன், காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் மற்றும் ஈ.ராஜா ஆகியோர் உடனிருந்தனர். சட்டப்பேரவைச் செயலரிடமும், அமைச்சர் நிர்மல்குமாருக்கு எதிராக தி.மு.க. குழுவினர் உரிமை மீறல் கடிதம் கொடுத்தனர்.



புதுச்சேரி தட்டாஞ்சாவடி தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் சேது செல்வம், தட்டாஞ்சாவடியில் உள்ள ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அதிகாரி அர்ஜுன் ராமகிருஷ்ணனிடம் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார். வேட்பு மனு தாக்கலின் போது புதுச்சேரி மாநில தேர்தல் பொறுப்பாளர் ஜெகத்ரட்சகன் எம்.பி., புதுச்சேரி மாநில கழக அமைப்பாளர் இரா. சிவா, எதிர்க்கட்சித் தலைவர் நாஜிம், சட்டமன்ற உறுப்பினர்கள் செந்தில்குமார், விக்னேஷ் கண்ணன், விழுப்புரம் மத்திய மாவட்ட தி.மு.க. செயலாளர் லட்சுமணன் எம்.எல்.ஏ., வானூர் தொகுதி எம்.எல்.ஏ., கௌதம் திராவிட மணி உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### மீனாட்சி அம்மன் குடமுழுக்கு நிகழ்வில்

# அரசியல் தலையீடு உள்ளது!

### அறங்காவலர் குழுத் தலைவர் ருக்மணி பழனிவேல்ராஜன் பேட்டி!

மதுரை, செப்.17-

மதுரை மீனாட்சி அம்மன் கோயில் அறங்காவலர் குழு தலைவர் ருக்மணி பழனிவேல்ராஜன் மற்றும் அறங்காவலர் குழுவினர் நேற்று, நிருபர்களிடம் கூறியதாவது:-

மதுரை மீனாட்சி அம்மன் கோயில் குடமுழுக்கு விழாவை எந்தவித கருத்து வேறுபாடுகளுக்கும் இடம் கொடுத்து விடாமல் ஒருமித்த கருத்துடன் அனைவரும் மகிழ்ச்சியாக நடத்திட வேண்டும் என நாங்கள்



நினைத்துக் கொண்டிருந்தோம். ஆனால், குடமுழுக்கு விழா அழைப்பிதழில் எங்களின் பெயர் புறக்கணிக்கப்பட்டது. நீதிமன்றம் அறிவுறுத்தி அது பேசு பொருளானது. ஆனால் விழா சீரும் சிறப்பாக நடைபெற வேண்டிய இந்நேரத்தில் பக்தர்களின் பாதுகாப்பு, உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளிட்டவற்றை தாண்டி முறையான வழிகாட்டு நெறிமுறைகள் அனைவரும் தெரிந்து கொள்ளும்படி வெளியிடப்பட்டுள்ளதா என்பது கேள்விக்குறியாக உள்ளது.

நன்கொடைதாரர் மற்றும் உபயதாரர்களுக்கு பாஸ் சென்று சேர்ந்துள்ளதா என எங்களுக்கு தெரிவிக்கப்படவில்லை. கடந்த 1963ல் மறைந்த பி.டி. ராஜன் தலைமையில் இத்திருகோயில் குடமுழுக்கு சிறப்பாக நடைபெற்று, மீனாட்சி அம்மனுக்கு வைரக்கிரீடம் சாற்றிய குடும்பத்தின் வழிவந்த எங்களின் குடும்பத்தில் என்றைக்குமே அரசியலையும், ஆன்மீகத்தையும் நாங்கள் இணைத்து பார்த்ததில்லை. ஆனால், மீனாட்சி அம்மன் குடமுழுக்கு நிகழ்வில் அரசியல் தலையீடு உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.



முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு அவர்களின் தேர்தல் வெற்றியை சென்னை உயர்நீதிமன்றம் உறுதிசெய்த நிலையில் திருவண்ணாமலையில் கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் தலைமையில் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார். உடன் இரா.ஸ்ரீதரன், ப.கார்த்திவேல்மாறன், எஸ்.பன்னீர்செல்வம், பிரிய விஜயரங்கன், குட்டி க.புகழேந்தி, பா.ஷெரீப், ஏ.ஏ.ஆறுமுகம், பாலமுரளிகிருஷ்ணா, இல.குணசேகரன், அ.அருள்குமரன் உட்பட பலர் உள்ளனர்.

### ஓய்வு பெற்ற நீதியரசர் குரியன் ஜோசப் தலைமையிலான – ஒன்றிய – மாநில அரசுகளுக்கு இடையிலான உறவுகள் குறித்து ஆராய அமைக்கப்பட்ட

# உயர்நிலைக் குழுவை முடக்கும் வேலைகளில் ஆளுங்கட்சி இறங்கி இருப்பது கண்டிக்கத்தக்கது!

## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வலைதளப் பதிவு!

**சென்னை, செப்.17**

**ஓய்வு பெற்ற நீதியரசர் குரியன் ஜோசப் தலைமையிலான - ஒன்றிய - மாநில அரசுகளுக்கு இடையிலான உறவுகள் குறித்து ஆராய அமைக்கப்பட்ட உயர்நிலைக் குழுவை முடக்கும் வேலைகளில் ஆளுங் கட்சி இறங்கி இருப்பது கண்டிக்கத்தக்கது! என்று சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் விடுத்துள்ள வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.**

**அவரது வலைதளப் பதிவு வருமாறு:-**

ஓய்வுபெற்ற நீதியரசர் குரியன் ஜோசப் தலைமையில் ஒன்றிய - மாநில அரசுகளுக்கு இடையேயான உறவுகள் குறித்து ஆராய்வதற்காக நம் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசால் அமைக்கப்பட்ட உயர்நிலைக்குழுவை முடக்கும் வேலைகளில் ஆளுங்கட்சி இறங்கி இருப்பது கண்டிக்கத்தக்கது.

பணியாளர்கள் பற்றாக்குறையால் இந்தக்குழு தொடர்ந்து செயல்படுவதில்



சிக்கல் ஏற்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இதனால், மாநில சுயாட்சி குறித்த குழுவின் 2-ஆவது ஆய்வு அறிக்கையை தயார் செய்து வந்த ஆய்வாளர்களும் – ஆராய்ச்சி மாணவர்களும் தொடர்ந்து செயல்பட முடியாத சூழலை இந்த Dummy அரசு உருவாக்கி இருக்கிறது.

மாநில உரிமைகள் குறித்து பேசுவதற்கும், போராடுவதற்கும் பயப்படும் த.வெ.க அரசு, அது குறித்து ஆய்வு செய்யவே பயந்து நடுங்கி ஆணையத்தை முடக்குவது வெட்கக்கேடானது.

Reels போட்டால் மட்டும் மாநில சுயாட்சியை நிலைநாட்ட முடியாது என்பதை உணர்ந்து, ஒன்றிய – மாநில அரசுகளின் உறவு பற்றி ஆய்வு செய்யும் உயர்நிலைக்குழு, தொய்வின்றி செயல்படுவதை இந்த அரசு உறுதி செய்ய வேண்டும்.

இவ்வாறு அப்பதிவில் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### கடலூர் மேற்கு மாவட்டம் - நல்லூர் வடக்கு ஒன்றியம்

# பெரியநெசலூர் எஸ்.கார்த்திக் பா.ரம்யா மணவிழா!

### மாவட்டக் கழகச் செயலாளர் சி.வி.கணேசன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

கடலூர், செப்.17–

கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் கழக இளைஞரணி செயலாளர் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் நல்வாழ்த்துக்களுடன் கடலூர் மாவட்டம் வேப்பூர் வட்டம் பெரிய நெசலூர் சுப்பிரமணியன் பழனியம்மாள் ஆகியோரின் மகன் கிளைக் கழக நிர்வாகி எஸ்.கார்த்திக் கடலூர் மாவட்டம் விருத்தாசலம் வட்டம் பரவலூர் பாலு–ராணி ஆகியோரின் மகள் பா.ரம்யாவுக்கும் திருமணம் இன்று (17.09.2026 வியாழக்கிழமை) நல்லூர் ஸ்ரீ சாந்தி மஹாலில் நடைபெறுகிறது.

இத்திருமணத்திற்கு கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் திட்டக்குடி சட்டமன்ற உறுப்பினர் சி.வி. கணேசன் தலைமை ஏற்று மணமக்களை வாழ்த்துகின்றார்.

மேலும் நல்லூர் வடக்கு ஒன்றிய செயலாளர் தலைமைச்



செயற்குழு உறுப்பினர் பாவாடை கோவிந்தசாமி, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சி.வெ.க. வெங்கடேசன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.எஸ். கணேஷ்குமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.டி. கலைச்செல்வன், மங்களூர் வடக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் கே.என்.டி.சங்கர், பெரம்பலூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், நல்லூர் வடக்கு ஒன்றிய துணை செயலாளர்கள் பூலாம்பாடி டி. அண்ணாதுரை, ஏ.அன்புகுமரன், மாரிமுத்தாள் குணசேகரன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் தங்க. நாராயணசாமி, முன்னாள் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் துரை.கருப்புசாமி, மாவட்ட பிரதிநிதி சி. சக்திவிநாயகம், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் ஆர்.ரகுநாதன், மாவட்ட வர்த்தகர் அணி துணை அமைப்பாளர் அ.தனசேகரன், கல்வியாளர் பேரவை மாநிலத் துணைத் தலைவர் டி.தண்டபாணி, மற்றும் அணிகளின் நிர்வாகிகள் சோலைராஜன், பி.சசிகுமார், பி.சுப்பிரமணியன், வீரச்ச்செல்வி, பால். கருப்பையா, எம். மண்ணாங்கட்டி, பெ.ஐயப்பன் ஜி. வெங்கடாசலம் எம்.வி.எல். தனசேகர் டி.கண்ணன். அ.பாபு வேப்பூர் வி.குணா ஏ.செந்தில்குமார் கோவி.கதிரவன் அரிஈசன் வி. கணேசன் கே. கதிர்வேல் ஆர். மாரிமுத்து சி. ரஜினிகாந்த் இ.ராஜவேல் இ. துரைமுருகன் எம்.சூர்யா வி. வினோத் சிவக்குமார் அன்புநிதி வி. சாக்ரடீஸ் வி. உதயநிதி பெரியநெசலூர்கிளைக் கழக நிர்வாகிகள் வி.பரமசிவம் பி. கோவிந்தசாமி எஸ்.ராஜங்கம் வி.பி.எஸ். ராஜா கே.பெரியசாமி அண்ணாதுரை எம்.பெரியசாமி ஆர்.சந்திரபாபு சித்ரா சி. செல்வம் சி.சரவணன் எஸ்.பூபதி டி.சங்கர் செந்தில்ராணி சிவக்கொழுந்து ஜெயந்திசங்கர் பி.ரமேஷ் வேல்முருகன் சுதாகர் ஹரிஹரன் விஜயகுமார் சக்திவேல் ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

பெரியநெசலூர் கிளைக் கழக நிர்வாகி ஓ.குமார் காமாட்சி மற்றும் நல்லூர் வடக்கு ஒன்றிய இலக்கிய அணி துணை அமைப்பாளர் எ.தங்கபெருமாள் கனிமொழி ஆகியோர் அனைவரையும் வரவேற்கின்றனர்.

### த.வெ.க. ஆட்சியில் நகராட்சி நிர்வாகத்துறையில் டெண்டர் முறைகேடு ஊழல்!

# ஆளுங்கட்சியின் ஊழலுக்கு எதிராக தி.மு.க. களத்தில் இறங்கிப் போராடும்!

### கழக துணை அமைப்புச் செயலாளர் எஸ்.ஆஸ்டின் எம்.எல்.ஏ. வலைதளப் பதிவு!

சென்னை, செப்.17 -

நகராட்சி நிர்வாகத்துறையில் டெண்டர் முறைகேடு ஊழல் குறித்து தி.மு.கழக துணை அமைப்புச் செயலாளர் எஸ்.ஆஸ்டின், எம்.எல்.ஏ., சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

‘தொட்டால் விடமாட்டேன் தொடவும் விடமாட்டேன் டேபிள் மேல ஃபைல்ஸ் வச்சு இருக்கேன்’ என்று வண்டி வண்டியாக Reels Dialog பேசி Scene ஓட்டிய டம்மி முதலமைச்சரின் ஆட்சியில், அவரது துறையிலேயே, பணி முடிந்த பிறகு டெண்டர் விடுவது எனும் அரியவகை ஊழல் அம்பலமாகி இருக்கிறது.

தாம்பரம் மாநகராட்சியில் ரூ.45 லட்சம் மதிப்பிலான பணிகளில் டெண்டர் முறைகேடு நடந்திருப்பது தற்போது வெளிச்சத்துக்கு வந்துள்ளது. Powder அமைச்சர் சரத்குமார் தாம்பரத்தில் கடந்த ஜூலை மாதமே திறந்து வைத்த Ashoka Stupa சிலைக்கு ஆகஸ்ட் மாதத்தில் டென்டர் விட்டு சாதனை படைத்திருக்கிறது தூய ஆட்சி.

அதுமட்டுமின்றி, சித்தலபாக்கம் ஏரியில் Save Water சிலையை ஆகஸ்ட் 10ஆம் தேதி Powder அமைச்சர் திறந்து வைத்துள்ளார். ஆனால், அந்தப் பணிக்கான டென்டர் விண்ணப்பம் சமர்ப்பிக்க ஆகஸ்ட் 24ஆம் தேதி வரை காலக்கெடு இருப்பதாக சொல்லப்பட்டுள்ளது.

ஒரு பக்கம் முதலமைச்சரின் கட்டுப்பாட்டில் உள்ள



காவல்துறை, சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட முடியாமல் திணறுகிறது இன்னொரு பக்கம் முதலமைச்சரின் கீழ் உள்ள நகராட்சி நிர்வாகத்துறை ஊழலில் திளைக்கிறது. இதுதான் இவர்கள் சொன்ன மாற்றமா?

தன்னுடைய துறைகளையே சரியாக நிர்வகிக்க வக்கற்ற முதலமைச்சர், தமிழ்நாட்டை எப்படி வளர்த்தெடுப்பார்?

முதலமைச்சரின் துறையில் நடந்துள்ள இந்த ஊழல் முறைகேடு தொடர்பான விசாரணையை லஞ்ச ஒழிப்புத்துறை உடனே தொடங்க வேண்டும்.

இதில் தொடர்புடையவர்கள் யாராக இருந்தாலும், அவர்களுக்கு உரிய தண்டனையைப் பெற்றுத் தர வேண்டும். இல்லையெனில், ஆளுங்கட்சியின் இந்த ஊழலுக்கு எதிராக தி.மு.கழகம் களத்தில் இறங்கி போராடும்.

இவ்வாறு எஸ்.ஆஸ்டின் எம்.எல்.ஏ. பதிவிட்டுள்ளார்.